இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஏப்ரல் 26-ஆம் தேதி, பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறன்று (நல்ல ஆயன் ஞாயிறு) அனுசரிக்க்கப்படவுள்ள வேளையில், 63-வது உலக செப நாளுக்காக, திருத்தந்தை 14-ஆம் லியோ தனது செய்தியை வெளியிட்டுள்ளார். அதில், ஒவ்வொரு அழைப்பும் "திருஅவைக்குக் கிடைத்துள்ள அளவிட முடியாத கொடை" என்று அவர் வர்ணித்துள்ளார்.

# திருத்தந்தை 14-ஆம் லியோ: ஒவ்வொரு அழைப்பும் "திருஅவைக்குக் கிடைத்துள்ள அளவிட முடியாத கொடை"



வத்திக்கான் நகர்: ஏப்ரல் 26-ஆம் தேதி, பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறன்று (நல்ல ஆயன் ஞாயிறு) அனுசரிக்க்கப்படவுள்ள வேளையில், 63-வது உலக செப நாளுக்காக, திருத்தந்தை 14-ஆம் லியோ தனது செய்தியை வெளியிட்டுள்ளார். அதில், ஒவ்வொரு அழைப்பும் "திருஅவைக்குக் கிடைத்துள்ள அளவிட முடியாத கொடை" என்று அவர் வர்ணித்துள்ளார்.

திருத்தந்தை தனது செய்தியில், 'அழைத்தல்' என்பதை மனித இதயத்தின் ஆழத்தில் மலரும் "கடவுளின் இலவசக் கொடையைக் கண்டடைதல்" என்று குறிப்பிட்டார். நல்ல ஆயனாகிய கிறிஸ்துவைப் பின்பற்றுவது, வாழ்வின் உண்மையான அழகை வெளிப்படுத்துவதோடு, அவரைச் சந்திப்பவர்களின் வாழ்வையே அந்த அழகு உருமாற்றுகிறது என்பதையும் அவர் வலியுறுத்துகிறார்.

செபம் மற்றும் அகத்தாய்வின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த திருத்தந்தை, ஒருவரது அழைப்பைக் கண்டறிய (discernment) அமைதி, செவிசாய்த்தல் மற்றும் இறைவனின் முன்னிலைக்கு நம்மைத் திறந்துவிடுதல் ஆகியவை அவசியம் என்று கூறினார். புனித அகுஸ்தினாரின் வாழ்வைச் சுட்டிக்காட்டிய அவர், கடவுளுடனான ஒரு தனிப்பட்ட சந்திப்பு எவ்வாறு ஒருவரது வாழ்வை மாற்றி, அதன் ஆழமான பொருளை விளக்குகிறது என்பதைக் குறிப்பிட்டார்.

அழைத்தல் என்பது திணிக்கப்படுவது அல்ல, மாறாக அது "அன்பு மற்றும் மகிழ்ச்சியின் சாகசம்" என்று திருத்தந்தை வலியுறுத்தினார். மேலும், அழைத்தல்கள் பேணி வளர்க்கப்படுவதற்கும், வழிநடத்தப்படுவதற்கும் ஏற்ற சூழலை உருவாக்க குடும்பங்கள், பங்குகள் மற்றும் திருஅவைச் சமூகங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

நிச்சயமற்ற காலங்களிலும் கடவுள் மீது நம்பிக்கை வைப்பதற்கு புனித யோசேப்பை ஒரு முன்மாதிரியாகக் காட்டிய திருத்தந்தை, ஒவ்வொரு நபரையும் ஒரு தனித்துவமான புனிதத்துவப் பாதைக்கும் பணிக்கூட்டுதலுக்கும் கடவுள் அழைக்கிறார் என்று குறிப்பிட்டார்.

இளைஞர்களுக்கு அறிவுரை வழங்குகையில், கவனச் சிதறல்களை விட்டு விலகி, ஆண்டவரின் குரலுக்குச் செவிசாய்க்குமாறும், செபம், இறைவார்த்தை, அருளடையாளங்கள் மற்றும் திருவிருந்து ஆராதனை ஆகியவற்றின் மூலம் அவரோடு கொண்டுள்ள உறவை ஆழப்படுத்துமாறும் திருத்தந்தை கேட்டுக்கொண்டார்.

"ஒவ்வொரு அழைப்பும் திருஅவைக்கும், அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்பவர்களுக்கும் கிடைத்துள்ள அளவிட முடியாத ஒரு கொடை" என்று அவர் தெளிவுப்படுத்தினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# அல்ஜீரியா பயணம் ஒரு 'சிறப்பு ஆசீராகவும் உரையாடலை வளர்க்கும் வாய்ப்பாகவும் அமைந்தது: திருத்தந்தை



அல்ஜீரியா நாட்டிற்கான தனது திருதூதுப் பயணத்தை முடித்துக்கொண்டு கேமரூன் தலைநகர் யாவுண்டே (Yaoundé) நோக்கிப் பயணித்த திருத்தந்தை 14-ஆம் லியோ, அல்ஜீரியா பயணம் குறித்துத் தனது கருத்துக்களைப் பகிர்ந்துக் கொண்டார். இப்பயணம் "தனிப்பட்ட முறையில் எனக்குக் கிடைத்த ஒரு சிறப்பு ஆசி" என்றும், "பாலங்களை உருவாக்கவும், மதங்களுக்கிடையேயான உரையாடலை வளர்க்கவும் கிடைத்த ஒரு அற்புதமான வாய்ப்பு" என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதன்கிழமை அன்று அல்ஜீரியாவிலிருந்து கேமரூன் சென்ற விமானத்தில் தன்னுடன் பயணித்த சுமார் 70 செய்தியாளர்களிடம் திருத்தந்தை பேசினார்.

அல்ஜீரிய அரசு அதிகாரிகள் தனக்கு அளித்த உற்சாகமான வரவேற்புக்காகவும், திருஅவைக்கு அவர்கள் அளித்த கௌரவத்திற்காகவும் திருத்தந்தை தனது நன்றியைத் தெரிவித்தார். அல்ஜீரிய வான்வெளியில் பாப்பிறை விமானத்திற்கு அளிக்கப்பட்ட இராணுவப் பாதுகாப்பு மரியாதை குறித்துப் பேசுகையில், "இது அல்ஜீரிய மக்களும், அந்நாட்டு அரசாங்கமும் திருஅவை மீதும், என் மீதும் கொண்டுள்ள நன்மதிப்பு, தாராள மனப்பான்மை மற்றும் மரியாதையின் அடையாளம்" என்றார்.

அல்ஜீரியாவில் வாழும் கத்தோலிக்கத் திருஅவை மக்கள் தொகையில் மிகச் சிறிய அளவில் இருந்தாலும், அவர்களின் சிறப்பான பங்களிப்பிற்கும் வரவேற்பிற்கும் திருத்தந்தை நன்றி கூறினார்.

முன்னதாக, அங்கு 'Sisters of Poor' இல்லத்தில் சேவையாற்றிக்கொண்டிருக்கும் மலேசியாவைச் சேர்ந்த புனித யோசேப்பின் அருட்சகோதரியான பிலோமினா பீட்டர் திருத்தந்தையை அல்ஜீரியா நாட்டுக்கு வரவேற்று உரை நிகழ்த்தினார். இவர் கோலாலம்பூர் மாமறைமாவட்ட திருத்தொண்டரும் எதிர்வரும் மே மாதம் குருத்துவ அருட்பொழிவுக்கு தாயாரித்துக்கொண்டிருக்கும் 'Deacon' ரோபர்ட் அந்தோனி பீட்டர் அவர்களின் உடன் பிறந்த சகோதரியுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

அல்ஜீரியாவிலுள்ள 'ஆப்பிரிக்காவின் அன்னை மரியா' பேராலயம் மற்றும் அன்னபா (Annaba) நகரிலுள்ள 'புனித அகுஸ்தினார்' பேராலயம் ஆகியவற்றிற்குச் சென்றதை நினைவுக் கூர்ந்த திருத்தந்தை, ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித அகுஸ்தினாரின் மரபு இன்றும் முக்கியமானது என்றார்.

"புனித அகுஸ்தினார் இன்றும் ஒரு முக்கியமான வழிகாட்டியாகத் திகழ்கிறார். உண்மையை நோக்கியும், கடவுளை நோக்கியும் தேடலைத் தொடங்க அவர் விடுக்கும் அழைப்பு இன்றைய காலத்திற்கு மிகவும் தேவையானது. இது கிறிஸ்துவை நம்பும் நமக்கு மட்டுமல்ல, உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தும் ஒரு செய்தியாகும்," என்று திருத்தந்தை கூறினார்.

அல்ஜீரியர்களில் பெரும்பான்மையோர் கத்தோலிக்கர்கள் இல்லை என்றாலும், புனித அகுஸ்தினாரை அந்த மண்ணின் ஒரு சிறந்த மகனாக அவர்கள் மதிக்கிறார்கள் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அல்ஜீரியாவில் வாழும் கிறிஸ்தவர்கள், கலாச்சார மற்றும் மத வேறுபாடுகள் இருந்தாலும், முஸ்லிம் சகோதர சகோதரிகளுடன் எவ்வாறு அமைதியாக வாழ்வது என்பதற்கு ஒரு சிறந்த சான்றாக விளங்குகிறார்கள் என்று அவர் பாராட்டினார்.

"இரண்டு நாள் அல்ஜீரியா பயணத்தில், உறவுப் பாலங்களை அமைக்கவும் உரையாடலை வளர்க்கவும் நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்தது. மசூதிக்குச் சென்றது ஒரு முக்கியமான நிகழ்வாகும். நமது நம்பிக்கைகளும், வழிபாட்டு முறைகளும், வாழ்க்கை முறைகளும் வெவ்வேறாக இருந்தாலும், நாம் அனைவரும் அமைதியுடன் ஒன்றிணைந்து வாழ முடியும் என்பதை இது உணர்த்துகிறது," என்று கூறித் தனது உரையைத் திருத்தந்தை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# 'மனிதர்களுக்கு அல்ல, கடவுளுக்கே கீழ்ப்படியுங்கள்'

காமரூன் நாட்டின் மேற்குப் பகுதியிலுள்ள பாமெண்டா நகரில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை 14-ஆம் லியோ, அப்பகுதியை வாட்டும் வறுமை மற்றும் அநீதிகளைக் கண்டித்தார். அமைதி மற்றும் நல்லுறவு நிறைந்த எதிர்காலத்தை உருவாக்க, காமரூன் நாட்டு மக்கள் தங்களையே கடவுளிடமும் அவரது வார்த்தையிடமும் ஒப்படைக்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

- அமைதி மற்றும் நல்லுறவு: ஒவ்வொரு மனிதரின் கண்ணியமும் மதிக்கப்பட்டு, அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்படும் ஓர் எதிர்காலத்தை அமைத்திட திருத்தந்தை தனது ஆதரவைத் தெரிவித்தார்.
- மக்களின் துயரம்: ஆங்கிலம் பேசும் மக்கள் வாழும் இப்பகுதியில் நிலவும் வன்முறை, இடப்பெயர்வு மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து அவர் கவலை தெரிவித்தார்.
- நம்பிக்கை தரும் விசுவாசம்: மக்களின் துடிப்பான மற்றும் மகிழ்ச்சியான வழிபாட்டு முறைகளைப் பாராட்டிய திருத்தந்தை, இது கடவுள் மீது அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் அடையாளம் என்றார்.
- வறுமையின் பல்வேறு வடிவங்கள்: உணவு நெருக்கடி, ஊழல், கல்வி மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள், மற்றும் இளைஞர்கள் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்தல் போன்ற பிரச்சனைகளை அவர் சுட்டிக்காட்டினார்.
- மாற்றத்திற்கான தருணம்: "ஒற்றுமை என்னும் ஓவியத்தை மீண்டும் உருவாக்க வேண்டிய நேரம் இது, நாளை அல்ல, இன்றே!" என்று அவர் அழைப்பு விடுத்தார்.

"கடவுள் புதுமையானவர், தீமையை எதிர்த்து நின்று, நன்மையை நிலைநாட்டும் தைரியத்தை அவர் நமக்கு வழங்குகிறார். நாம் மனித அதிகாரங்களுக்கு அல்ல, மாறாக கடவுளுக்கே கீழ்ப்படிய வேண்டும். அப்படிச் செய்பவர்கள் தங்கள் உள்ளத்தில் விடுதலையைப் பெற்று, அமைதியையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புபவர்களாக மாறுகிறார்கள். கடவுள் ஒருவரே நம்மை விடுவிக்கிறார்; அவருடைய வார்த்தை மட்டுமே விடுதலைக்கான பாதைகளைத் திறக்கிறது; அவருடைய தூய ஆவியார் மட்டுமே நம்மைப் புதிய மனிதர்களாக மாற்றுகிறார்." இவ்வாறு திருத்தந்தை மொழிந்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# ஒற்றுமை மற்றும் நற்செய்திப் பணியின் எழுச்சியாக அமைந்த இறையிரக்கப் பெருவிழா கொண்டாட்டங்கள்.



மலேசியா முழுவதிலும் உள்ள கத்தோலிக்கத் திருஅவையினர், உயிர்ப்புப் பெருவிழாவின் நம்பிக்கையையும் இறையிரக்கத்தினையும் மையமாகக் கொண்டு, மிகுந்த ஆன்மீக ஆர்வத்துடன் இறையிரக்கப் பெருவிழாவைக் கொண்டாடினர். ஷா ஆலாம் (Shah Alam) மற்றும் ஜோகூர் (Johor) பகுதிகளில் உள்ள பங்குகள், இறைமக்களைச் செபம், தியானம் மற்றும் புதுப்பிக்கப்பட்ட மறைப்பணி அர்ப்பணிப்பில் ஒன்றிணைத்தன. கிறிஸ்துவின் கருணையை அனுபவிக்கும் ஒவ்வொரு விசுவாசியும், இவ்வுலகில் அவருடைய அன்பிற்குச் சாட்சிகளாக மாறவேண்டும் என்பதே இக்கொண்டாட்டங்களின் முக்கியக் கருத்தாக அமைந்தது.

**ஷா ஆலாம்: திருஅவை ஒரு குடும்பமாய்...**

ஷா ஆலாம், இறையிரக்கத் தேவாலயம் (CDM) இப்பெருவிழாவை ஒன்பது நாள் நவநாள் செபத்துடன் "அருளின் தசாப்தம்" (Decade of Grace) என்ற கருப்பொருளுடன் கொண்டாடியது. புனித வெள்ளி முதல் ஏப்ரல் 12 வரை நடைபெற்ற இந்த நவநாட்கள், பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் தவக்கால அழைப்பான "ஒரே இறைவனில், நாம் அனைவரும் ஒன்று" என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டுக் கொண்டாடினர்.

- **அன்றாட நிகழ்வுகள்:** தினசரி திருப்பலிகள், திருவிருந்து ஆராதனை மற்றும் ஆன்மீக உரைகள் இறைமக்களைத் தங்களது துன்பங்கள், குடும்ப உறவுகள் மற்றும் மனமாற்றங்களில் கடவுளின் இரக்கத்தைக் கண்டடைய அழைப்பு விடுத்தன.
- **சிறப்புத் திருப்பலிகள்:** நோயாளிகள், முதியவர்கள் மற்றும் குழந்தைகளுக்காகச் சிறப்புத் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன. மேலும், கலை நிகழ்ச்சிகள் மற்றும் அன்பின் விருந்து ஆகியவை பங்குச் சமூகத்தை வழிபாட்டிலும் கொண்டாட்டத்திலும் ஒன்றிணைத்தன.

**ஸ்குடாய், ஜோகூர்: பன்மொழி சங்கமம்**

ஜோகூர், ஸ்குடாய் பகுதியில் உள்ள இறையிரக்கத் தேவாலயத்தில், சுமார் 600-க்கும் மேற்பட்ட விசுவாசிகள் கலந்துகொண்ட பன்மொழித் திருப்பலி நடைபெற்றது. 2024 ஏப்ரல் மாதம் ஆயர் பெர்னார்ட் பால் அவர்களால் இந்த ஆலயம் திருப்பொழிவு செய்யப்பட்ட பிறகு நடைபெறும் முக்கிய விழாவாக இது அமைந்தது.

- **ஆன்மீகத் தயாரிப்பு:** புனித வெள்ளி அன்று தொடங்கிய நவநாள் செபங்களில், தெற்கு ஜோகூர் மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர்கள் புனித பவுஸ்தினாவின் நாட்குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு போதனைகளை வழங்கினர்.
- **ஆயரின் செய்தி:** பெருவிழா திருப்பலியைத் தலைமை தாங்கி நடத்திய ஆயர் பெர்னார்ட் பால், சீடர்கள் பயந்து மூடியிருந்த அறைக்குள் இயேசு வந்து அமைதியை வழங்கிய நற்செய்தியை நினைவூட்டினார். நமது பயங்கள் மற்றும் "மூடப்பட்ட இதயங்களுக்குள்" இயேசு அமைதி, மன்னிப்பு மற்றும் நம்பிக்கையோடு நுழைகிறார் என்று அவர் கூறினார்.
- **சாட்சிகளாய் வாழ அழைப்பு:** வரவேற்பு, இறைவார்த்தை, வழிபாடு, சாட்சிய வாழ்வு மற்றும் பிறரன்புப் பணிகள் ஆகியவற்றைத் தனது வாழ்வின் அங்கங்களாகக் கொண்டு, கடவுளின் பிரசன்னத்தை உலகுக்குக் காட்டும் அடையாளங்களாக வாழ ஆயர் அழைப்பு விடுத்தார்.

இக்கொண்டாட்டத்தில் தமிழ், சீனம், ஆங்கிலம் மற்றும் மலாய் மொழி பேசும் விசுவாசிகள் அனைவரும் ஒரே குடும்பமாக இணைந்து செபித்தது, திருஅவையின் ஒற்றுமையை உலகிற்குப் பறைசாற்றியது.

தமிழாக்கம் ஹெரால்டு








## புனித வாரம் - திருவழிபாடு சொற்பொழிவு




புனித வாரம் என்பது இயேசு கிறிஸ்துவின் பாடுகள், இறப்புமற்றும் உயிர்ப்பை நினைவு கூரும் ஒரு முக்கியமான வாரமாகும். அதை உணர்த்தும் வகையில், "புனித வாரத்தின் பயணம்" என்றதலைப்பில் குவாடலூப்பே அன்னை தேவாலயத்தின் திருவழிபாட்டுப் பணிக்குழு சொற்பொழிவுக்கு ஏற்பாடுச் செய்திருந்தனர். மார்ச் 28ம் திகதி, நடந்த இந்நிகழ்வு சகோதரி செல்வி ஆரோக்கியம் அவர்களின் தலைமையில், மறை மாவட்டதிருவழிபாட்டுப் பணிக்குழு சார்ந்த சகோதரர் மைக்கேல் அந்தோணி அவர்களால் வழிநடத்தப்பட்ட இப்பயிற்சியில் சுமார் 35க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர்.

திருவழிபாட்டில், புனித வாரத்தின் முக்கியத்துவத்தையும் அதன் வழிபாட்டு முறைகள் மற்றும் அதன் வரலாற்று பின்னணி குறித்தும் விளக்கினார். திருப்பாடுகளின் ஞாயிறு அதாவது இயேசு எருசலேமில் அரசராக வெற்றியுடன் நுழைந்தது முதல் தொடங்கி, உயிர்ப்பு ஞாயிறு வரை இப்புனித வாரம் நீடிக்கிறது. புனித வியாழன் (மாண்டி வியாழன்) அன்று திருத்தைலம் திருநிலைப்படுத்தல், பாதம் கழுவுதல், குருத்துவம், நற்கருணை ஆராதனை ஆகியவற்றின் முக்கியத்துவத்தைக் குறித்தும், இந்நாளில் சுரூபங்களும், உருவப்படங்களும் ஏன் திரையிடப்படுகின்றன என்பதற்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

புனித வெள்ளி, இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளை நினைவுகூரும் மிக முக்கியமான நாளாகக் கருதப்படுகின்றன. இந்த நாளில் திருப்பலி நடைபெறாது; அதற்கு பதிலாக "திருப்பாடுகள் வழிபாடு" நடைபெறும். அன்று பலிபீடம் வெறுமையாகக் காணப்படும். சிலுவை முத்தி செய்து சிலுவை ஆராதனை செய்யப்படும். தொடர்ந்து, ஈஸ்டர் திரிடியம் (Easter Triduum) என்பது புனிதவியாழன் முதல் ஈஸ்டர் ஞாயிறு வரை உள்ள "மூன்று புனிதநாட்கள்" ஆகும், அன்று காலை ஜெபம், திருப்புகழ்மாலை, இறைவார்த்தை போன்ற முக்கிய ஜெபங்களில் பங்கேற்பதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

திருவழிபாடு வெறும் சடங்குகள் மட்டுமல்ல, இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான பிணைப்பை வலுப்படுத்தும் உயிருள்ள வழிபாடு என்றக் கருத்தோடு இந்த சொற்பொழிவு, இறுதி ஜெபத்துடன் நிறைவடைந்தது.

Angeline, குவாடலூப்பே அன்னை தேவாலயம், பூச்சோங்

## பாஸ்கா காலம் 4 ஆம் ஞாயிறு (ஆண்டு 1) நல்லாயன் ஞாயிறு 26-04-2026

மார்ச் 22 – தவக்கால 5ஆம் ஞாயிறு
வாசகங்கள்: எசேக்கியேல் 37:12-14,
திருப்பாடல்கள் 130:1-2, 3-4, 5-6, 7-8,
உரோமையர் 8:8-11, யோவான் 11:1-45

### "என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன"

பாஸ்கா காலத்தில் பயணித்துக்கொண்டிருக்கும் நம் அனைவருக்கும் இன்றைய வாசகங்கள் நம்முடைய ஆண்டவர் இயேசு, நல்ல ஆயனாக நம்மைத் தொடர்ந்து வழிநடத்துகிறார் என்பதை மீண்டும் ஆழமாக அறிவிக்கின்றன.

இன்றைய முதல் வாசகத்தில், திருத்னதர் பேதுரு துணிவோடு கூறுகிறார். "மனம் மாறுங்கள், மன்னிப்பு பெறுங்கள்", இதனால் உங்கள் தலைமுறையின் வாழ்க்கையே மாறும் என்று பறைசாற்றுகின்றார். உயிர்ப்பின் செய்தி இதுவே. இயேசுவோடு உண்டு, குடித்து, அவரின் பாடுகளைக் கண்டு சாட்சிகளாக இருந்த திருத்னதர்களின் சான்று ஒரே நாளில் மூவாயிரம் பேரை அவர்களோடு இணைத்தது.

திருப்பாடல் ஆசிரியர் எவ்வளவு அழகாகப் பாடுகிறார் பாருங்கள். "ஆண்டவரே, என் ஆயர், எனக்கேதும் குறையில்லை" ஆயனுக்குத் தெரியும் தம் ஆடுகளின் தேவை என்னவென்று. ஆடுகள் ஒருபோதும் கவலைப்படத் தேவையில்லை. அவர்களின் அனைத்துத் தேவைகளும் நிறைவேற்றப்படும்.

இரண்டாம் வாசகத்தில் பேதுரு இவ்வாறு கூறுகிறார். வழிதவறிய ஆடுகளைப் போல இருந்த நாம், ஆயரும் கண்காணிப்பாளருமாய் இருப்பவரிடம் வந்துள்ளோம். ஆம், நாம் அனைவரும் சரியான பாதையில் நேர்மையான தலைவரிடம் வந்து சேர்ந்துள்ளோம்.

இன்றைய நற்செய்தியில் இயேசுவே இதை முழுவதுமாக உறுதிப்படுத்துகிறார். "ஆடுகளுக்கு வாயில் நானே, அவரின் குரலுக்கு அவரின் ஆடுகள் செவிசாய்க்கும்"

இன்றைய நாளை நாம் நல்லாயன் ஞாயிறாக நினைவுகூர திருஅவை நம்மை அழைக்கிறது. இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆயனைப் பற்றியும் ஆடுகளைப் பற்றியும் நமக்கு எடுத்துரைக்கின்றன. இயேசு ஆயனாக, தம்மை உருவகப்படுத்துகின்றார். கிறிஸ்துவத்தை முழுமையாக அறியாதவர் கூட, ஓர் ஆட்டை தம் கையில் ஏந்தியிருக்கும் இயேசுவின் ஓவியத்தைப் பார்த்து, இவர் ஓர் ஆடு மேய்ப்பவர் என்று எளிதாகக் கூறிவிடுவர். அந்த அளவிற்கு இயேசுவை ஒரு நல்ல ஆயனாகப் பலரும் கேள்விப்பட்டிருப்பர். கூடுதலாக கிறிஸ்துவர்களாகிய நமக்கு இயேசு ஒரு நல்ல ஆயனாகவும. தன்னுடைய ஆடுகளுக்காக உயிரையும் தந்தவராகவும் நாம் அறிந்துள்ளோம், நம்பிக்கைக் கொண்டுள்ளோம். நல்ல ஆயன், ஆடுகள் வாழ்வு பெறும்பொருட்டு வந்தார். தன்னுயிரையும் அளித்தார். இன்றைய நவீன உலகில் நாம் யாருடைய குரலுக்குச் செவிகொடுத்துப் பின்செல்கிறோம். உண்மையிலேயே நான் அவரின் குரலைக் கண்டுகொள்கிறேனா? அல்லது இது அவருடைய குரல்தான் என்று தவறாக எண்ணி, வேறு பாதையில் செல்கின்றேனா?

திருஅவையில் காணக்கூடிய ஆயனாக , இயேசு ஏற்படுத்திச் சென்ற பொறுப்பாளராக இருக்கும் நம் திருத்தந்தையின் குரல்நிச்சயமாக, நம் விண்ணக ஆயனை நோக்கிச் செலுத்தக்கூடியதாகத் தான் இருக்கும். திருத்தந்தை தன்னலமாக கத்தோலிக்கர்கள் மட்டும் பயன்பெற வேண்டுமென்று எண்ணாமல், உலக மக்கள் அனைவரும் அமைதியிலும், நீதியிலும், போரின்றி அச்சமின்றியும் வாழவேண்டுமென்று எப்போதும் உலகத் தலைவர்களை நோக்கிக் குரல் எழுப்புகின்றார். ஆயன் என்ற தன்னுடைய தலைமைத்துவத்தை உண்மையாக நிறைவேற்றுகின்றார்.

இயேசுவின் குரலைக் கேட்போம், அவரின் பாதையில் செல்வோம். அதுமட்டுமில்லாமல், வழிதவறி அலையும் ஆடுகளுக்கு நாமும் நம்மால் இயன்ற வகையில் சரியான பாதையைக் காட்டுவோம். நாம் மட்டும் நிலை வாழ்வை, விண்ணக வாழ்வை, பசும்புல் மேய்ச்சலைக் கண்டு அனுபவித்தால் மட்டும் போதாது. நாம் வழிநடக்கும்போது, வாழ்வு தேவைப்படும் ஒவ்வொருவரையும் நமது குரலால், வழிகாட்டுதலால் வாழ்வின் பாதைக்கு அழைத்துவரும் ஆயனாகவும் இருப்போம்.

ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.